யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020

தரம் - 12 (2021) | இணைந்த கணிதம்

பெயர் / சுட்டெண் : ..... திரு.ச.அகிலன் B.Sc, M.Sc, PGDE

அறிவுறுத்தல்கள் :

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

மட்டுச்சமனிலிகள்

1. $|x-3| \leq 2|x-2|$ ஐ திருப்தியாக்கும் x இன் பெறுமான வீச்சைக் காண்க.
2. $y=|2x-1|, y=|x-2|$ ஆகிய வரைபுகளை ஒரே வரிப்படத்தில் பரும்படியாக வரைக. இதிலிருந்து $|2x-1|=|x-5|$ ஐத் திருப்தியாக்கும் x இன் பெறுமானங்களைக் காண்க. இதிலிருந்து $|2x-1|<|x-5|$ ஆகுமாறு x இன் மெய்ப்பெறுமானங்களின் வீச்சைக் காண்க.
3. பின்வரும் வரைபுகளை ஒரே வரிப்படத்தில் வரைக.
   i. $y=|3x-2|-3x$
   ii. $y=|4-6x|-6x$

   இதிலிருந்து $|3x-2|-3x>|4-6x|-6x$ ஆக இருக்கும் x இன் பெறுமானங்களின் தொடையைக் காண்க.
4. சமனிலி $\left|\frac{1}{2}x-3\right|+\left|\frac{1}{3}x-4\right|<5$ ஐத் திருப்திப்படுத்தும் x இன் பெறுமானங்களைக் காண்க.
5. $2|x|>|2x-5|+|x+1|$ இல் x இன் பெறுமான வீச்சைக் காண்க.
6. சமனிலி $|x+2|+|x-1|>5$ ஐத் திருப்தியாக்கும் x இன் எல்லா மெய்ப்பெறுமானங்களினதும் தொடையைக் காண்க.
7. $y=|3-x|, y=5-|x|$ இன் வரைபுகளை ஒரே அச்சுக்களில் வரைக. இதிலிருந்து $|x|+|3-x|<5$ எனும் சமனிலியை திருப்தி செய்யும் x இன் பெறுமான வீச்சைக் காண்க.
8. $|x-1|>3|x-5|$ ஆக இருக்கும் x இன் பெறுமானத் தொடையைக் காண்க.

www.ikedu.lk